
தன்நிலை உயர்த்தி!
பிறர்நிலை உயர்த்து!
பதிவு எண்:
14/2020
விடியல்
அறக்கட்டளை
WWW.VIDIYALTRUST.ORG.IN / VIDIYAL_TRUST / 8438390369

விடியல்

அறக்கட்டளை

# நோக்கங்கள்

1.யாசகம் இல்லாத தாயகம்
2.அனைவருக்கும் கல்வி
3.விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்துதல்
4.மரம் மற்றும் குறுங் காடு அமைத்தல். (பசுமை திட்டம்)
5.ஊனமுற்றோர் மற்றும் கைம்பெண் ஆகியோருக்கு வேலை வாய்ப்பு உருவாக்குதல்.
6.மருத்துவ நல திட்டங்களை உருவாக்குதல்.



# 1.யாசகம் இல்லாத தாயகம்

இந்தியாவில் யாசகம் பெறுவது என்பது தனிநபர் பிரச்சினை மட்டுமின்றி ஒரு சிக்கலான சமூக பிரச்சினையாகவும் அறியப்படுகிறது. 2011-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஏறத்தாழ 4,13,670 யாசகர்கள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதில் வேதனைக்குரியது என்னவென்றால் படித்த பட்டதாரிகளும் உள்ளடங்குவர். இந்நிலை ஏனென்று பார்த்த பொழுது அவர்களுக்கு தங்குவதற்கு இருப்பிடமும், அன்றாட உணவும், போதிய கல்வி வசதியும்,வேலை வாய்ப்பும், விழிப்புணர்வும் இல்லாத காரணத்தினால் தான் இந்நிலைக்கு தள்ளப்படுகிறார்கள் என்று தெரியவந்துள்ளது. அவர்களுக்கு இருப்பிடமும், உணவும், கல்வியும், வேலைவாய்ப்பும் சரிவர ஏற்படுத்தி கொடுத்தால் இந்நிலையில் இருந்து அவர்களை மீட்டெடுக்கலாம். இந்நிலையில் இருந்து மீட்டெடுக்க மக்களாகிய நாம் தான் ஒரு விதி செய்ய வேண்டும்.

"ஒரு உயிர் பசியில் வாடினால்,
நாம் அனைவரும் நாண வேண்டும் "



# 2.அனைவருக்கும் கல்வி

கல்வி என்பது குழந்தைகளை உடல் மற்றும் மன வளர்ச்சியில் அறிவு நல்லொழுக்கம் ஆகிய மதிப்புடன் வளர்க்க உதவும் ஒரு சமூக அமைப்பு ஆகும். இன்றைய உலகின் இன்றியமையாத ஒன்றாக திகழ்வது யாதெனில் கல்வியே ஆகும். கல்வியின் சிறப்பு பற்றி கூறும் போது கல்வி கற்றவன் எந்த இடத்திற்குச் சென்றாலும் அவன் பிற சமூகத்தால் மதிக்கப்படுகிறான்.அதற்கு காரணம் அவன் கற்க கல்வியே. இத்தகைய பெருமை மிக்க கல்வியை கற்க போதிய வசதி இல்லாமல் பலரும் வேதனைப்படுகின்றனர். அவர்களை கண்டறிந்து அனைவருக்கும் முறையான கல்வி வசதிகளை செய்து கொடுத்து அவர்களின் வாழ்வின் தரத்தை உயர்த்த வேண்டும். அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் கல்வி கற்க இயலாதோர் இவ்வுலகில் இல்லை என்ற நிலையை உருவாக்க மக்களாகிய நாம் தான் ஒரு விதி செய்ய வேண்டும்.

" கல்வி கற்க இயலாதோர் நிலை உயர
வேண்டுமெனில்நாம் அனைவரின் கைகளும்
இணைய வேண்டும் "



# 3.பசுமை திட்டம்

அப்துல் கலாம் ஐயா அவர்களின் கனவுகளில் ஒன்று "பசுமை இந்தியா" உருவாக்குவது. பல லட்சம் மரங்களை நடுவதே எங்களின் இலக்கு மரம் நடுவது, குறுங் காடு வளர்பது மற்றும் குறுங்காட்டின் பயனை விளம்பரம் செய்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது. வனப்பாதுகாப்பு சட்டம் போன்றவற்றின் மூலம் காடுகளை அழிப்பதைத் தடுப்பது மற்றும் தண்டிப்பதும். நிலத்தடி நீரை உறிஞ்சி எடுக்கும் கருவேல மரங்களை அழித்து மழைநீர் சேகரிக்கும் மரங்களை நட்டு வளர்த்தல். கல்லூரி, பள்ளிகள், கோவில்கள், மருத்துவமனைகள், அரசு சார்ந்த இடங்களில் மரங்களை நட்டு பராமரித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தல். பசுமை திட்டத்தின் கீழ் மரங்களையும், குறுங்காடுகளை அமைக்க மக்களாகிய நாம் தான் ஒரு விதி செய்ய வேண்டும்.

"ஒரு மரம் நட்டால் ஒரு லட்சம் பேருக்கு அன்னதானம் செய்வதற்கு சமம்"



# 4. விளையாட்டு வீரர்களை ஊக்குவித்தல்

எண்ணற்ற திறமையான விளையாட்டு வீரர்கள் போதுமான வசதியின்மை மற்றும் வழிகாட்டுதல் இன்றியும் வறுமையின் விளிம்பில் சிக்கித் தவிப்பதாலும் அவர்கள் தங்கள் கனவுகளை கைவிடும் நிலை உருவாகிறது.விளையாட்டுத் துறையின் வளர்ச்சி ஒவ்வொரு நாட்டின் முன்னேற்றத்தை அளவிடும் கருவியாகிறது.பயிற்சி உபகரணங்கள் மற்றும் நிகழ்வுகளில் பங்கேற்பதற்கு நிதியுதவி வழங்கி வீர,வீரங்கனைகளை ஊக்குவித்தல்.அனுபவம் வாய்ந்த விளையாட்டு வீரர்கள் அல்லது பயிற்சியாளர்களுடன் அவர்களை இணைத்து அவர்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டுதல்.பொது மக்களின் ஆதரவை பெற அவர்களின் திறமை மற்றும் சாதனை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.திறமையான விளையாட்டு வீரர்களுக்கு உதவித் தொகை மற்றும் மானியம் வழங்குதல்.நிதி ரீதியாக பின்தங்கிய விளையாட்டு வீரர்களுக்கு உதவி அவர்களின் கனவுகளை ஆதரிப்பது மட்டுமல்லாமல் அவர்களின் தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் நல்வாழ்விற்க்கு வழிவகுக்க மக்களாகிய நாம் தான் ஒரு விதி செய்ய வேண்டும்.



# 5.மாற்றுதிறனாளிகள் மற்றும் கைம்பெண்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்குதல்

இந்திய மக்கள்தொகையில் 2.21% மக்கள் மாற்றுத்திறனாளிகள். சாதாரண மக்களுக்கே வாழ்க்கை சவால் நிறைந்ததாக உள்ளது. இந்த சூழ்நிலையில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் கைம்பெண் தங்கள் வாழ்வில் கூடுதல் சவாலை சந்திக்கின்றனர்.அவர்களின் வாழ்வை ஊக்குவிக்கும் வகையில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் கைம்பெண்களின் குறிப்பிட்ட தேவை மற்றும் அவர்களின் திறன்களை கண்டறிந்து வேலைவாய்ப்பை உருவாக்க வழிசெய்தல்.மாற்றுத்திறனாளிகள் மற்றும் கைம்பெண்களுக்கு ஆதரவளிக்கும் நிறுவனங்கள் அல்லது தொழில்பயிற்சி மையங்களை கண்டறிந்து அவர்களுடன் இணைந்து ஆதரவு அளித்தல்.கைம்பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு கொடுக்கும் அரசு நலதிட்டங்களின் விவரங்களை அறியாதவர்களுக்கு அதை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்கள் அதைப் பெற்றிட வழிவகை செய்தல்.சுய தொழில் செய்ய விரும்புகிறவர்களை அது தொடர்பான திறன்களை வளர்த்திட தொழிற்பயிற்சியில் ஈடுபடச்செய்தல்.மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களுக்கு தேவையான செயற்கை உபகரணங்கள் வழங்குதல் போன்ற நன்மைகளை செய்ய மக்களாகிய நாம் தான் இனி இரு விதி செய்ய வேண்டும்.



# 6.மருந்துவ நலத்திட்டங்களை உருவாக்குதல்

பல்வேறுவிதமான மக்கள் போதுமான மருத்துவ உதவியை அணுகுவதில் இன்றளவும் சவால்களை எதிர்கொள்கின்றனர்.வழக்கமான சுகாதார முகாம்களை ஏற்பாடு செய்து இலவச மருத்துவ ஆலோசனைகள் வழங்கி மருந்துகளை விநியோகம் செய்தல் (தன்னார்வ தொண்டு செய்ய விரும்பும் மருத்துவர்களின் உதவியுடன்). குறிப்பிட்ட நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளை உதவ தயாராக இருக்கும் மருத்துவர்களின் வலையமைப்பை உருவாக்கி உதவுதல் இலவசஆம்புலன்ஸ் சேவையை ஏற்படுத்தி தருதல். குறிப்பிட்ட நிறுவனங்களுடன் அல்லதுகல்லூரிகளுடன் வலையமைப்பை உருவாக்கி இலவச இரத்ததான முகாம்களை நடத்தி. இரத்த வங்கி ஏற்படுத்தி இரத்தம் தேவைப்படும் நபர்களுக்கு வழங்குதல்அரசு அறிவித்திருக்கின்ற நலத் திட்டங்களைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன் மூலம் மக்களைப் பயன்யடைய செய்தல்

விடியல்

அறக்கட்டளை

# திருவாடானை அருகே ஏழை,எளிய மக்களுக்கு இலவச பொருட்கள்

திருவாடானை மே 2:

திருவாடானை அருகே விடியல் அறக்கட்டளை சார்பாக ஏழை ,எளிய மக்களுக்கு இலவச பொருட்கள் வழங்கப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டம் ,திருவாடானை தாலுகா பாண்டுகுடி ஊராட்சி திணையதூர் கிராமத்தில் விடியல் அறக்கட்டளை சார்பாக உழைப்பாளர் தினம் அன்று ஆதரவற்றோர்களுக்கு மற்றும் ஏழை எளிய மக்களுக்கு ,50 குடும்ப நபர்களுக்கு தலா 5கிலோ அரிசி ஒருவாரத்திற்கு தேவையான காய்கறிகள் உணவு பொருட்களை கல்லூரி மாணவன், விடியல் அறக்கட்டளை நிறுவனர் மதிவாணன் மற்றும் மலைராசு முன்னிலையிலும் சமூக ஆர்வலர்கள் ராஜசரவணன், மற்றும் நிர்வாகிகளும் கலந்து கொண்டு சமூக இடைவெளிகளை கடைப்பிடித்து பொருட்களை வழங்கினார்கள்.

# நிவாரணம் வழங்கல்

**தொண்டி, ஏப்.26–**

திருவாடானை வட்ட சட்டப்பணிகள் குழு சார்பில் தொண்டியில் ஏழை குடும்பங்கள், கர்ப்பிணிகள் மற்றும் காப்பகங்களுக்கு அரிசி, பருப்பு உள்ளிட்ட 13 வகையான மளிகை பொருட்கள் வழங்கப்பட்டது.

ஏற்பாடுகளை தன்னார்வலர் கோட்டைசாமி உள்ளிட்ட பலர் செய்து இருந்தனர்.

பாண்டுகுடியில் விடியல் அறக்கட்ளை சார்பில் ஏழை குடும்பங்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது.

அறக்கட்டளை நிறுவனர் மதிவாணன், ஊராட்சி தலைவர் சிங்கதுரை உட்பட பலர் கலந்து கொண்டனர்.





# இராமநாதபுரத்தில் விடியல் அறக்கட்டளை சார்பாக கருவேல மரங்களை அகற்றி மரம் நடும் பணி நடைபெற்றது



இராமநாதபுரம்,ஜூலை,12-

இராமநாதபுரத்தில் விடியல் அறக்கட்டளை சார்பாக கருவேல மரங்களை அகற்றி மரம் நடும் பணி நடைபெற்றது.

விடியல் அறக்கட்டளை பசுமை திட்டத்தின் கீழ் காலி பொது இடங்களில் உள்ள கருவேல மரங்களை அகற்றி சுத்தம் செய்து மரங்களை நடும் பணியில் முதல் கட்டமாக நிகழ்வாக இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை தாலுகா பாண்டுகுடி ஊராட்சி வடக்கு குடியிருப்பில் அமைந்துள்ள ஸ்ரீ வழுத நாயகி அம்மன் கோயில் அருகே உள்ள பொது இடத்தை சுத்தம் செய்து மரக்கன்றுகளை விடியல் அறக்கட்டளை நிறுவனர் ம. மதிவாணன் மற்றும் பாண்டுகுடி ஊராட்சி மன்ற தலைவர் kop. சிங்கதுரை மற்றும் .சமூக ஆர்வலர்கள் N. மலைராசு, வ. விஜேந்திரன், M. ராஜ சரவணன், M. கோபால், T.மகாலிங்கம் ,R. இளங்கோ, பாஸ்கரன் மற்றும் கிராம சமூக ஆர்வலர்களால் சுமார் 75 மரகன்றுகள் நடப்பட்டுள்ளது

# மரக்கன்றுகள் நடும் விழா

தொண்டி, ஜூலை.12-

திருவாடானை தாலுகா பாண்டுகுடியில் விடியல் அறக்கட்டளை சார்பில் பசுமை கிராமம் திட்டத்தின்கீழ் காட்டுக் கருவேல முட் செடிகள் மண்டிக்கிடந்த இடங்களை சுத்தம் செய்து பொது மக்களுக்கு பயன்தரும் வகையில் மரக்கன்றுகள் நடப்பட்டன. மேலும் வடக்கு குடியிருப்பில் மருத நாயகி அம்மன் கோவில் வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் பணியை ஊராட்சி தலைவர் வக்கீல் சிங்கத்துரை தொடங்கி வைத்தார். 75-க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய தி.மு.க. துணை செயலாளர் மலைராஜ், ஒன்றிய தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் மகாலிங்கம், முன்னாள் ஊராட்சி தலைவர் விஜயேந்திரன், விடியல் அறக்கட்டளை நிறுவனர் மதிவாணன், சமூக ஆர்வலர்கள் கோபால், பாஸ்கரன், ராஜ சரவணன், இளங்கோ உள்பட பலர் கலந்து கொண்டனர்.






கிருமி நாசினி தெளிக்கப்பட்டுள்ளது



இடம் :பாண்டுகுடி

30 குடும்பங்களுக்கு நிவாரணம் பொருள் வழங்கப்பட்டது.



கபசுர குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இடம் :வடக்கு தெரு







இடம்:இராமநாதபுரம்
50மேற்பட்ட ஆதரவற்றோர்களுக்கு உணவு உடை காலணி வழங்கப்பட்டது.


மானாமதுரை சார்ந்த ஸ்டார் ரத்னா சர்க்கஸ்
தொழிலாளர்களுக்கு நிவாரண பொருட்கள், உணவு
வழங்கப்பட்டது.
இடம் :ஆண்டாவூரணி




(திணையத்தூர்)
50 குடும்பங்களுக்கு நிவாரணம் பொருள் வழங்கப்பட்டது



விடியல்
அறக்கட்டளை
இவண்: விடியல் அறக்கட்டளை
கிருமி நாசினி தெளிக்கப்பட்டுள்ளது







இராமநாதபுரம் மாவட்டம் , திருவாடானை தாலுகா வெள்ளையபுரம் ஊராட்சி வெள்ளையபுரம் கிராமத்தில் விடியல் அறக்கட்டளை சார்பாக ஏழை எளிய மக்களுக்கு , 50 மேற்பட்ட குடும்ப நபர்களுக்கு தலா 5 கிலோ அரிசி ஒருவாரத்திற்கு தேவையான காய்கறிகள் உணவு பொருட்களை கல்லூரி மாணவன், விடியல் அறக்கட்டளை நிறுவனர் ம. மதிவாணன் மற்றும் வெள்ளையபுர ஊராட்சி மன்ற தலைவர் N.M.பரக்கத்அலி மற்றும் நா. மலைராசு முன்னிலையில் மற்றும் சமூக ஆர்வலர் , Sm.ரமேஷ்,சுபாஷ்,விஜய்,மணி,கருப்பையா.ஆகியோர் சமூக இடைவெளிகளை கடைப்பிடித்து பொருட்களை வழங்கினார்கள்.





விடியல் அறக்கட்டளை சார்பாக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் காவல் ஆய்வாளர் ஹரிஹரன் தலைமையில் உதவி ஆய்வாளர் குறளரசன், விடியல் அறக்கட்டளை நிறுவனர் மலை.மதிவாணன், செயலாளர் ஆறுமுகம் முன்னிலையில் இரத்த தான முகாம் நடைபெற்றது. இதில் 20க்கும் மேற்ப்பட்ட தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.








Rotary

பதிவு எண்:14/2020

விடியல் அறக்கட்டளை

**AC NAME : VIDIYAL TRUST**
**BANK NAME : IDFC FIRST BANK**
**AC ID NO : 10157243917**
**CUST ID : 6254234323**
**IFSC CODE : IDFB0081111**
**BRANCH : TIRUNELVELI VANNARAPETTAI**

நன்றி!!